தமிழ்ச் சிட்டு

மடிவதோ இன்னமும்?
உரிமை முழக்கடா!

அறிவுறு நலன்களும் தேவை யில்லை—தம்பி
அன்பதும் தேவை யில்லை!
செறிவுறு பண்புகள் தேவை யில்லை—நல்ல
சிந்தனை தேவை யில்லை!
நறுவுணர் வெல்லாமும் அடிமைப் படிகளே!—நாளும்
நாளுமே உனைக்கீழ் இறக்கும்!
பெறுவது தமிழருக்(கு) உரிமை ஒன்றே!—அதைப்
பெறும் போதே அவைதாமும் சிறக்கும்!

அடிமைக்கோ அறிவென்ப தெதிரிக்கு ஆக்கம்—தம்பி
அன்பாக நடப்பதும் தேக்கம்!
மிடிமையர்க் கெதற்குப்பண் பாடுகள் எல்லாம்? - தம்பி
மேலும் மேலும் அவை தாக்கம்!
விடிவதற் குள்ளே, நீ எழுந்திடல் வேண்டும்!—தம்பி
விடியலுன் துயரினைப் போக்கும்!
மடிவதோ இன்னமும்? உரிமை முழக்கடா!—இனி
வருங்காலம் உனதுதான் நோக்கம்!

குரல் : 21
இசை : 6

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

விலை :
உருபா : 1-00

தெரிந்து கொள்ளுங்கள்

- இந்தியாவில் உள்ள தொடர்வண்டிப் பாதையின் மொத்த நீளம் 60,000 அயிர மாத்திரி (கி.மீ) ஆகும். இது 37,500 கற்கள் (மைல்கள்) ஆகும். இதில் 10,000 அ.மா. நீளம் (7250 கற்கள்) மின் மயமாக்கப் பெற்றுள்ளது. இந்தியத் தொடர்வண்டிகள் அனைத்தும் நாள்தோறும் 7000 தொடர் வண்டி நிலையங்களைத் தாண்டிச் செல்கின்றன. அவை நாள்தோறும் 1 கோடியே 10 இலக்கம் பயணிகளை ஏற்றிச் செல்கின்றன.

- கீரைகளை மலிவாகவும், ஏளனமாகவும் கருதக் கூடாது என்று அறிவியல் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. எடுத்துக் காட்டாக ஓர் அயிரி (கிலோ) எடையுள்ள கீரையில் (அ'து அகத்தி, முளைக்கீரை, தண்டுக் கீரை, முருங்கைக் கீரை அரைக்கீரை, கொத்தமல்லி, கறிவேப்பிலை மணித்தக்காளி, குப்பைக் கீரை, பசளை ஆகியவற்றில் எதுவேண்டுமானாலும் இருக்கலாம்) 70 அயிரி (கிலோ) வாழைப்பழத்திற்கு ஈடாகச் சாரம் உள்ளது. ஓர் அயிரி அகத்திக் கீரையில் உள்ள சுண்ணம்புச் சாரத்தை நாம் பெறவேண்டுமானால் 113 அயிரி (கிலோ) எடையுள்ள அரத்தி (ஆப்பிள்) பழங்களை நாம் சாப்பிட வேண்டும். ஓர் அயிரி அரைக் கீரையில் உள்ள இரும்புச் சாரத்தை நாம் பெற வேண்டுமானால், 32 அயிரி (கிலோ) அன்னாசிப் பழத்தை நாம் சாப்பிட வேண்டும். எனவே, நம் உணவில் நாள்தோறும் கீரை இருப்பது உடலுக்கு மிகவும் நல்லது.

- வெறி மயக்க(போதை)ப் பொருள்களில் செங்கருப்புச் சர்க்கரை (பிரவுன் சுகர்) எனப்படும் ஒரு பொருள் அனைத்துலகச் சந்தையில் ஓர் அயிரி (ஒரு கிலோ) ஒரு கோடி உருபாவுக்கு விற்கப் படுகிறதாம்.

- உலகின் வெப்ப நிலை கடந்த 10,000 ஆண்டுகளைக் காட்டிலும், அடுத்த 100 ஆண்டுகளில் அதிகரிக்கும் என்று இலண்டனில் உள்ள மதிப்பு மிகு அறிவியல் அறிஞர்குழு ஒன்று அறிக்கை கொடுத்துள்ளது.

  அதில், உலக வெப்பநிலை அடுத்த 35 ஆண்டுகளில் ஏறத்தாழ ஒரு பாகை (டிகிரி) வெப்பம் அதிகரிக்கலாம் என்று கூறப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பத்தாண்டிலும் கடல் மட்டம் 5·8 நூற்றளவை (செ.மீ) அல்லது 2030 ஆவது ஆண்டுக்குள் 20 நூற்றளவை உயரும் என்றும், அடுத்த நூற்றாண்டின் முடிவில் 64 நூற்றளவை (செ.மீ) வரை உயரும் என்றும் கருத்துக் கூறப் பெற்றுள்ளது.

  உலக வெப்ப நிலை மிகுதியானால், கடல் மட்டம் அதிகரிக்கும்; நோய்கள் இன்னும் மிகுதியாகப் பரவும்; ஏழை நாடுகளில் பரவலாகப் பஞ்சம் ஏற்படும் என்றும் அறிவியல் அறிஞர்கள் எச்சரித்துள்ளனர்.

- இந்தியாவில் இப்பொழுது மொத்தம் 3 இலக்கம் மருத்துவர்களும் 2 இலக்கம் செவிலியர்களும் உள்ளனர்.

- இந்தியாவில் ஆண்டுக்கு ஏறத்தாழ 27,000 கொலைகள் நடை

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல், 21] (தி.பி. 2022) மேழம்-விடை ([redacted] 91') [இசை-6

உடன்பாடும் முரண்பாடும்-3

(குரல் : 21, இசை 3-இன் தொடர்ச்சி)

இதுவரை, மனவுணர்வு, அறிவுணர்வு, உடலுணர்வு ஆகிய மூவகை அடிப்படை மாந்தவுணர்வுகளில் எவ்வெவ்வாறு உடன்பாடுகளும் முரண்பாடுகளும் தோன்றுகின்றன என்பது பற்றியும், அவை இணங்கியும், பிணங்கியும் எவ்வாறு இயங்குகின்றன என்பது பற்றியும் ஒருவாறு விளக்கமாகவும் தெளிவாகவும் கண்டோம்.

இனி, மனவுணர்வால் உடன்பட்டுப் போகின்ற இருவர், அறிவுணர்வால் முரண்பட்டு இயங்கினாலும், அவர்கள் அடிப்படையான மனவுணர்வு ஒன்றியுள்ளவர்களாதலால், ஒருவர்பால் ஒருவர் அன்பு கொள்வதற்கும் நட்பாடுவதற்கும் இடம் உண்டு. இந்த நிலையை அவர்கள் மேலும் மேலும் உறவாடி வலுப்படுத்திக் கொள்வார்களானால், நாளடைவில் அறிவுணர்வாலும் உடன்பட்டுப் போகின்ற நிலை தானே உருவாகி விட வழியமைந்து விடும்; எவ்வாறெனில் மனம் பொருந்தப் பொருந்த அறிவும் முரண்பாடுகளைப் படிப்படியாகத் தணிவித்துக் கொண்டு, உடன்பாடு காணமுடிந்த நிலைகளில் ஒன்றிக் காலூன்றிக் கொள்ளும்; அதன்பின் இருவருள் வலிந்த அறிவுணர்வு எவர்பால் வெளிப்படுகின்றதோ, அவர், மெலிந்து தோன்றும் அறிவுணர்வுள்ள மற்ற

வரைச் சிறிது சிறிதாகத் தன்வயப்படுத்தி அவரைச் சிந்திக்கச் செய்கிறார். அச்சிந்தனை வளர வளர வலிந்த அறிவுணர்வு உள்ளவர்பால் மெலிந்த அறிவுணர்வு உள்ளவர் ஆட்பட்டு அவர் அறிவாளுமைக்கு உடன்பட்டுப் போகிறார். இ'து எடுத்த எடுப்பிலேயே நிகழாமல் காலத்தால் நிகழ்வது.

இதுபோலவே, மனவுணர்வும் அறிவுணர்வும் பொருந்திய நிலையுள்ள இருவர் செயலால் (அஃதாவது உடலால்) முரண்படுவதுண்டு. இவ்வாறு செயலால் முரண்படும் இருவர், தொடர்ந்து ஒருவருடன் பழகப் பழக, மனவுணர்வும் அறிவுணர்வும் வலிந்து இருகலாகி, இருவரையும் செயலுணர்விலும் அஃதாவது உடலுணர்விலும் உடன்பாடு உள்ளவர்களாக ஆக்கி விடுவதும் நிகழக்கூடியதே! அந்நிலையில் மனவுணர்வாலும் அறிவுணர்வாலும் வலிந்து நிற்பவர், அவற்றில் மெலிந்து நிற்பவரைத் தன் வயப்படுத்தி, தன்னுடைய செயலாளுமைக்கு அவரை ஆட்படுத்தி விடுவார். அக்கால் அவ்வுணர்வுகளில் குறைந்த திறமுடையவர் தன்னாளுமையை இழந்து விடுவார். அத்துடன் அவர் வாழ்வின் இறுதி நிலைவரை மற்ற முதலாமவர்க்கு அடி(மை)ப்பட்டு இயங்க வேண்டியதுதான்!

இனி, இதையும் போலவே, அறிவுணர்வாலும், உடலுணர்வாலும், அஃதாவது செயலாலும் உடன் பட்டுப் போகின்ற இருவர் மனவுணர்வால் முரண்படுவதும் உண்டு. அக்கால் ஊமைகள் இருவர் போல் ஒருவர்க்கொருவர் ஒன்றிய உணர்வின்றி, அறிவாலும் அதன் வழியமைந்த செயலாலும் ஒருங்கே இணைந்தவராய் இயங்கிக் கொண்டிருப்பர். இ'து, அண்ணன் தம்பியர் ஒரே பணியை, மனவிருப்பமின்றி, தம் குடும்ப நிலைப் பாட்டுக்கென ஈடுபாடு கொள்வதைப் போன்றது. இவர்களும் காலப்போக்கில்—முரண்பாடற்ற அறிவுணர்வும் உடலுணர்வும் கொண்டு இயங்குவதனால், மனவுணர்வில் படிப்படியாய் ஒன்றி முரண்பாடு நீங்கப்பெற்று உடன்பாடு கொள்ளுவதும் உண்டு. இவர்களின் முந்தைய நிலை தாமரையிலை மேல் உருளும் தண்ணீர் முத்துகளைப் போன்றிருந்து, பின், மணலுள் தெறித்த நீர் போல் ஒன்றையொன்று ஈர்த்துக் கொள்வது போலாகும்.

எஃது, எவ்வாறிருப்பினும், உடன்பாட்டுணர்வும், முரண்பாட்டுணர்வும் எதிரும் புதிருமான உணர்வுகளாம். இவ்விரண்டு வேறுபட்ட உணர்வுகளாலும் நிரம்பப் பெற்ற மாந்த இனம், ஒருவரால் மற்றவரும், மற்றவரால் அவ் வொருவரும், முட்டி மோதி, உருண்டு புரண்டு, ஊடலும் கூடலுமான இயக்கங்களை ஏற்படுத்திக் கொண்டு, மனத்தாலும் அறிவாலும் உடலியக்க உணர்வாலும் படிப்படியாய் மேம்பட்டுக் கூர்தலற முறைப்படி, விளங்க வேண்டும் என்பதே இயற்கையின் இயங்கியல் நோக்கமாகத் தெரிகின்றது. இவ்வாறின்றி, இவ்வுலகின்கண் மாந்தப் பிறப்பெடுத்த அனைவரும், ஒரே வகையான மனவுணர்வும், அறிவுணர்வும், உடலுணர்வும் கொண்டு இயங்குவார்களாயின்,

அவர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்ளவும் வாய்ப்பிராது; அதனால் மொழி தேவையில்லாமற் போகும்! அஃதாவது ஒருவர் பேச விரும்பும் ஒரு கருத்தை அவர்க்கு எதிரில் உள்ளவரும் ஏற்கனவே தெரிந்திருப்பார் ஆகையால், அவ்வாறு ஒன்றிய மனவுணர்வு கொண்டிருப்பவர்கள் பின் எதற்காகப் பேசிக்கொள்ளப் போகிறார்கள்? இனி, மொழி தேவையில்லாமற் போகவே கருத்தும் தேவையில்லாமற் போகும், அக்கால் அறிவுணர்வும் ஒரே நிலைப்பட்டதாக இருக்கும்; அறிவில் வளர்ச்சியிராது; அறிவில் வளர்ச்சியில்லாமற் போமாயின், மாந்த உயிரியக்கமும் தேவையிராது; அதனால் உடலும் தேவையிராது; பிறகு பிறப்புக்கும் வேலையில்லாமற் போகும். எனவே, உடன்பாடு எவ்வாறு தேவையான ஓர் உணர்வோ, முரண்பாடும் அவ்வாறு தேவையான ஓர் உணர்வுதான்!

இனி, உடன்பாடும், முரண்பாடும் புறவுணர்வுகளாக மட்டுமன்றி, அகவுணர்வுகளாகவும் உள்ளதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அஃதாவது, இவ்விரண்டு உணர்வுகளும் குறைந்தது இரண்டு பேர்களிடத்துத்தான் வெளிப்படும் என்றில்லை. ஒருவரிடமே கூட இவ்விரு உணர்வுகளும் செயல் படுவன. எவ்வாறெனில் ஒவ்வோரிடத்தும், ஒவ்வொரு காலத்தும், ஒவ்வொரு நிலையிலும் நமக்கு நாமே உடன்பட்டும் முரண்பட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறோம். ஒரு செயல் செய்ய முற்படும் பொழுது இது நமக்கு நன்கு புலப்படும். எந்த நிலையிலும் நமக்குள் இரு உணர்வுகள் செயல்படுகின்றன. எண்ணத்திலும், செயலிலும் நம் இருவுணர்வுகளும் எதிரும் புதிருமாகச் செயல் ஆற்றுகின்றன. ஒரு செயலுக்கு நம்மில் உள்ள இருவுணர்களில் ஒன்று உடன் பட்டும், இன்னொன்று முரண்பட்டும் இயங்குவதை நாம் உணரலாம். வீட்டை விட்டு வெளியே புறப்படும் தேவை ஒன்று நமக்கு வந்ததாக வைத்துக் கொள்வோம், அப்பொழுது நம் உணர்வுகளுள் ஒன்று நாம் புறப்படலாம் என்று உடன்படுவதையும், 'இப்பொழுது வேண்டாம் பிறகு புறப்படலாம்' என்றும் அல்லது 'புறப்படத் தேவையில்லை' என்றும், முரண்பட்டு இயங்குவதையும் நாம் அறியலாம். இவ்விருவகை உணர்வுகளும் எப்பொழுதும் நம்முள் செயல்பட்டுக் கொண்டே இருப்பதால்தான், நமக்கு நாமே ஒருவகையில் நடுநிலையாகவும், வேகக் கட்டுப்பாட்டுடனும், அமைவாக(நிதானமாக)வும், சிந்திக்கும் திறனுடனும் இயங்க முடிகிறது. இல்லெனில், நாம் படபடவென்றும், சிலநேரங்களில தவறாகவும், ஏதத்திற்கும் சேதத்திற்கும் ஆட்பட்டும், முட்டாள் தனமாகவும், மெத்த சோம்பலாகவும் இருந்து செயல்பட்டு விடுவோம்-என்பதை எண்ணிப் பார்த்து உணர்ந்து கொள்க. இன்னும் நுட்பாகக் கூற வேண்டுமெனில், இவ்விருவகை உணர்வுகளும் நமக்குள் செயல்பட வில்லையெனில், மனப் போராட்டமும், அறிவுப் போராட்டமும், செயல் போராட்டமும் நமக்குள் இல்லாமற் போகும். நம்மை வாழச் செய்வதும், இவ்வுணர்வுகள் தாம்! வாழ விரும்பாமல் வாழ்வை வெறுக்கச் செய்-

வதும் இவைதாம்! நமக்குத் துணிவை உண்டாக்குவதும், கோழைமையை ஏற்படுத்துவதும். இவைதாம் ஒன்றை விரும்பச் செய்வதும் வெறுக்கச் செய்வதும் இவைதாம்! மொத்தத்தில் நமக்கு நாமே ஒருவகையில் நட்பாகவும், பகையாகவும் நடந்து கொள்கிறோம்.

இவ்விருவகை உணர்வுகளும் நம்முள் செயல் படவில்லையானால், நாம் அடித்து வைத்த பிள்ளையார் போல இயக்கமின்றி ஓரிடத்தில் அமர்ந்து விடவேண்டியிருக்கும். நமக்கு ஓர் எதிராளன் புறத்தே தோன்றவில்லையெனில், நம் அகத்துக்குள்ளிருந்தே அவன் தோன்றி விடுவான். இயற்கை நமக்குக் கொடுத்துள்ள வாழ்வியல் உணர்வுகளுள் இவ்வுணர்வுகளும் மிக முகாமையானவை என்று நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒன்றைச் செய்ய நம் மனம் துணிவடையும் பொழுது, நம் அறிவு அதனை எதிர்த்து நமக்கு அமைவான (நிதானமான) சிந்தனையைத் தோற்றுவிக்கிறது. ஒரு செயலில் அறிவுணர்வு துணியும் பொழுது, மனம் அதை எதிர்க்கிறது. இரண்டும் துணிவு கொள்கிற பொழுது, உடலுணர்வு அவற்றை எதிர்க்கிறது. இவ்வாறு நமக்குள் நாமே உடன்பட்டும் முரண்பட்டும் நடந்து கொள்வது நமக்கு ஒரு வியப்பான செய்தியேயாகும்.

இவ்வகையில், நம் மனம் துணியும் செயலுக்கு நம் அறிவும் உடலும் ஒப்புதல் தந்தால்தான் அச்செயல் தொடங்கும்; நடைபெறும். அது போலவே நம் அறிவு துணியும் செயல்களுக்கு நம் மனமும் உடலும் ஒப்புதல் தர வேண்டும். அது போலவே, நம் உடல் துணியும் செயல்களுக்கு நம் மனமும் அறிவும்ஒப்புதல் தர வேண்டும். இம்மூன்று உணர்வுகளிலும் பெரும்பான்மையான இரண்டு உணர்வுகளின் ஒப்புதல் கிடைத்தால்தான் நாம் எதையும் செய்யத் துணிகின்றோம். அஃதாவது நமக்கு இரண்டு கால்கள்; ஆனால் நம் உணர்வுக்கு மூன்று கால்கள், இம் மூன்று கால்களும் தம்முள் உடன்பட்டு ஒரு முடிவுக்கு வந்தால்தான் நாம் ஒரு செயலைச் செய்ய முனைகிறோம்; செய்கிறோம். இந்த நிலையில் இம்மூன்று அடிப்படை உணர்வுகளும் ஒரு குடியரசு அமைப்பைப் போலவே இயங்கி, நம் வாழ்க்கையை வழி நடத்துகின்றன என்பதை நாம் நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். சில நேரங்களில் இவ்வுணர்வுப் பெரும்பான்மையுடன் நாம் செயல் படநேர்கிறது. ஆனால் மிகச் சில நேரங்களில் இம்மூன்று உணர்வுகளும் உடன்பட்டே இயங்குகின்றன. இவ்வாறு இயங்கும் செயல்களைத் தாம் நாம் மூவுணர்வுச் செயல்—மூவுரச் செயல்—முவ்வுரச் செயல்-மும்முரச் செயல்—என்றவாறு மதிப்பிட்டுச் சொல்லிக் கொள்கிறோம். இம்மூவுணர்வுகளும் இணைந்து செய்யும் செயல் மிக வலிவானதாக மும்முரமாக இயங்கும் என்று சொல்லத் தேவையில்லை.

(தொடரும்)

தமிழ் நாட்டில் தமிழ்க் கல்வி
கற்காமல் வேறு எங்குக் கற்பது?

நாம் வாழும் பெரும்புடவி! (பிரபஞ்சம்)

நாம் வாழுகின்ற உலகை உள்ளடக்கிய இப் பெரும்புடவி, (பிரபஞ்சம்), மிக இசைவான—வாய்ப்பான—நிலையில் ஒழுங்குடன் அமைந்துள்ளது.

இந் நூற்றாண்டின் இறுதியில்தான், நாம் காணத்தக்க இப் பெரும்புடவி முழுமையின் படி நிலை வளர்ச்சி பற்றிய கருத்தமைப்புகள் உறுதியாக நிலை நாட்டப் பெற்றன.

உயிருள்ள இயற்கை அமைப்புகளைப் போன்றே இப் புற வெளியாகிய பெரும்புடவியும் தனியான ஒரு கூறாகும்—என்றும் கண்டறியப் பெற்றது. இது தனித்தன்மை வாயந்தது என்று அறியப்பட்ட பருப் பொருள்களின் மிகு—அடர்த்தி மற்றும் மிகு—வெப்ப நிலையிலிருந்து உருவாகியுள்ளது. இந்த நிலையிலிருந்து இப் புடவி தோன்றியதன் தொடக்கக் காலத்திலிருந்தே பூதவியல் (Physics) நெறிகள் நடைமுறைக்கு வந்தன. அதன் பின்னர் அவை மாறாமல் அப்படியே இருந்து வருகின்றன. தொடக்கக் காலத்தில் இருந்த செறிவான தொகுதிகளின் பரிமாற்றத்துடனும் வேகங்களுடனும் கூடவே, இந்த வேதியல் நெறிகள் உலகத்தின் வருங்காலக் கட்டமைப்பு முழுமையையும் அதனுடைய போங்கு திசையையும் உறுதி செய்தன. அச் செறிவான தொகுதிகளாவன அணுக்கள், அணுத் திரட்சிகள், விண்மீன்கள், விண்மீன் கூட்டங்கள், கோள்கள் மற்றும் உயிரமைப்புகளை உள்ளடக்கிய தன்மைகள்.

தனித் தன்மை வாய்ந்த மிகப் பெரும் அளவான ஆற்றல்கள், பேரளவில் ஒன்றிணைந்தது பற்றிய இக் கால மெய்ம்மத்தின் படி, மூல முதலான செயலும், அதற்கு எதிர்ச் செயலும் ஏற்பட்டன. வெப்பம் தணிந்ததோடு, அ்து, ஆற்றல் குறைந்த மற்றும் ஆற்றல் மிகுந்த மின் காந்தச் செயல்களாகவும்—எதிர்ச் செயல்களாகவும் பிளவு பட்டது. அதன் பின்னர் ஈர்ப்பு நெறிகளின் படியான செயல்கள், எதிர்ச் செயல்கள் ஏற்பட்டன.

இச் செயல்களெல்லாம் ஒழுங்கான செயல்களாகவும், ஒழுங்கற்ற செயல்களாகவும், ஆனால் ஏதோ ஒரு வகையில் வேதியல் நெறிகளுக்கு உட்பட்டவாறு தற்செயல்களாகவே நிகழ்கின்றன.

இந்த நிகழ்வுகளின் மெய்ம்மங்களிலிருந்து நாம் அறிகின்ற உண்மை யாதெனில், புறவெளியின் கட்டுமானத்தை உறுதி செய்யும் வேதியல் (இயல்பியல்) ஆற்றல்கள் வேறு வேறு வகையாகவும் இருக்க முடியும் என்பதே. குறிப்பாக, நிலையாக இருக்கும் வேதியல் பொருள்கள், அடிப்படைத் துகள்களின் செறிவான தொகுதிகள், ஒளியின் வேகம், விண் வெளியின் பரிமாணத்

தன்மை முதலியன—ஒழுங்காகவும் ஒழுங்கு நிகழ்வு அற்றவையாகவும் இருக்கக் கூடும்.

தனித் தன்மையிலிருந்து வெளிப்பட்டதன் தொடக்கக் காலத்திலேயே, இப் பெரும்புடவியில் மிகவும் விரைவாக விரிவடைந்த நிகழ்வுப் போக்கு ஏற்பட்டது என்று 'பெருவெடிப்பு'க் கொள்கை பற்றிய அண்ட முழுமையியலின் அண்மை ஆய்வு கூறுகிறது.

பெரும் புடவியின் நிலை தொடக்கக் காலத்தில் மிகு—குளிர்விக்கப் பட்ட நீர்மத்தைப் போன்று நிலையற்றதாக இருந்தது. பின்னர் படிகத் தன்மை ஏற்பட்டு, ஒன்றோடொன்று தொடர் பற்ற பிரிவு மண்டலங்கள் உருவாயின. அவை தொளைகள் நிறைந்த கட்டமைப்பை உடைய மூல உருப்புகளாய் இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் வேதியல் (இயல்பியல்) நெறிகள் சமம் அற்றவையாகவும் இருக்கக் கூடும். ஆனால் காணத்தக்க பெரும்புடவி முழுமையும் அத்தகைய ஒரே ஒரு மூல உறுப்புக்கு ஒத்த தன்மையே உடையதாக இருக்கிறது.

இவ்வாறான பெரும் புடவியுள், ஆங்காங்கே பிரிந்து நின்ற துகள் சார்ந்த ஆற்றல் மண்டிலங்கள், ஆங்காங்கே வேறு வேறு இயக்கங்களைக் கொண்ட பலகோடி உலகங்களாக காலப் போக்கில் உருவாயின. அவ்வாறு புதிது புதிதாக, வேறு வேறு இடங்களில் வேறு வேறு காலங்களில் பிறந்த உலகங்கள் கோட்பாட்டு முறையில், வெவ்வேறு வகையான பண்புகளைப் பெற்றிருக்கக் கூடும். எண்ணற்ற பல கோடி உலகங்களில் ஒன்றே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இவ் வுலகம் மற்றவற்றை யெல்லாம் நினைந்து பார்க்கையில் இஃதொரு பொதுவான, எளிய திரட்சியாகவும் கருத இடமுண்டு.

வேதியல் (இயல்பியல்) நெறிகள் என்பவை இயல்பான கூறுகள் உடைய, பிற இயற்கை நெறிகளின் மாற்றுகள் மட்டுமே என்பதை அறிவியலார் நன்கு உணர்ந்திருக்கின்றனர். அதனடிப்படையில், இப் பெரும்புடவியும், அதனுள் அடங்கிய பல கோடி உலகங்களும், அவற்றைப் போன்ற ஒன்றாகிய இவ்வுலகமும் எவ்வாறு மிக நுண்ணிய முறையில் அமைந்துள்ளன என்பதையும், அவ்வகையில் கரடு முரடான உயிரற்ற பருப்பொருள்களும் அவற்றின் இயக்கங்களும் அந் நெறி முறைகளால் எவ்வாறு ஒழுங்கமைவு பெற்றுள்ளன என்பதையும் அவர்கள் உணர்ந்து வியப்படைகின்றனர்.

அத்துடன், இப்புடவியுள் எங்கோ ஓர் இடத்தில் என்றோ ஒரு கால நெருக்கத்தில், வேதியல் அடைவுத் தன்மையில், முதலாவதான அணுக்கள் தோன்றிய செயலைப் போலவே, முதலாவது உயிரணு மலர்ச்சியுற்று நுண்ணுயிர் தோன்றியதும் மிக மிக வியப்புக் குரியதாகும் என்றும் அறிவியலார் உணர்கின்றனர்.

(தொடரும்)

இயேசுவின் பன்னிரண்டு மாணாக்கர்கள்!

இயேசுவின் கருத்துகளையும் கொள்கைகளையும் அவரால் தேர்ந்தெடுக்கப் பெற்று, உலகம் முழுவதும் அனுப்பப் பெற்ற பன்னிரண்டு மாணாக்கர்கள்தாம் (சீடர்கள்தாம்) உலகம் முழுவதும் பரப்பினார்கள்.

அவர்கள் புனித இராயப்பர், புனித சின்னப்பர், புனித பிலவேந்திரர், (இவர் இராயப்பரின் தம்பி) புனித யாகப்பர், புனித அருளப்பர், புனித தோமையார், புனித சின்னயாகப்பர், புனித பிலிப்பு, புனித பர்த்தலோமேயு, புனித மத்தேயு, புனித சீமோன், புனித யூதாததேயு (இவர் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு சுகாரியாத்துக்குப் பகரமாகப் பணியாற்றியவர்).

இவர்கள் அனைவரும் இயேசுவைப் போலவே மிகக் கொடுமையாகக் கொல்லப்பட்டார்கள்.

புனித இராயப்பர் தலைகீழாகக் குறுக்கத்தில் (சிலுவையில்) அறையப்பட்டுக் கொல்லப் பட்டார்.

புனித சின்னப்பர் தலை வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்.

புனித பிலவேந்திரர் குறுக்க (சிலுவை) மரத்திற்குப் பகரமாக பெருக்கல் குறி (×) போன்ற மரக்கட்டையில் இழுத்து அறையப் பெற்றுக் கொல்லப் பட்டார்.

புனித யாகப்பர் தலை வெட்டப்பட்டுக் கொல்லப் பட்டார்.

புனித அருளப்பர் பற்பலவாறு உறுப்புச் சிதைவுகள் செய்யப் பெற்றபின் இறந்து போனார்.

புனித தோமையார் ஈட்டியால் குத்திக் கொல்லப் பட்டார்.

புனித சின்னயாகப்பர் கதிரால் அடித்துக் கொல்லப் பட்டார்.

புனித பிலிப்பு, இயேசுவைப் போலவே குறுக்கத்தில் அறையப் பட்டுத் தரையில் இழுத்துச் செல்லப்பட்டு உடல் காயங்களுடன் இறப்பு எய்தினார்.

புனித பர்த்தலோமேயு உயிரோடு தோல் உரிக்கப் பட்டுக் கொல்லப் பட்டார்.

புனித மத்தேயு தலை வெட்டப் பட்டு உயிர் போக்கப் பட்டார்.

புனித சீமோன் வாளால் பல துண்டுகளாக வெட்டப்பட்டு உயிர் துறந்தார்.

புனித யூதாததேயு, சிறு கோடாரியால் கொடுமையாக அடித்துக் கொல்லப் பட்டார்.

—பெரியமேடு இருதயநாதன்.

அச்சம்!

— அதியமான்

அச்சம் என்ற இவ்வுணர்ச்சி இரு நிலைகளில் நின்று இயங்கும். ஒன்று வீரக்குணம்; இன்னொன்று கோழைக்குணம். இவ்விரண்டு குணங்களுக்குமே இவ்வுணர்ச்சிகளுண்டு. வீரம் சினத்தை உண்டாக்கும்: அப்போது அஞ்சாமல் ஒரு செயலைச் செய்யத் தூண்டிவிடும். உணர்ச்சியின் விரைவில் அச்சமின்றி அது செயல் படுமேயாயின், அதன்விளைவு தீவினையைத் தந்துவிடும். எனவே சிந்தனை அறிவோடு செயல் படவேண்டும். செய்யும் செயலின் பின்விளைவைப்பற்றிச் சிந்தித்துச் செயலில் இறங்குவது அறிவுடைமையாகும் என்றார் வள்ளுவப் பேராசான்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்—குறள் 428.

ஒரு செயலைச் செய்வதற்கு நடுங்கியே ஆகல் வேண்டும் என்ற சூழல் இருந்தால், நடுங்கியே ஆகல் வேண்டும். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமல் இருத்தல் அறியாமையின் பாற்பட்டது. அஞ்சுவதற்கஞ்சுவதே அறிவுடையார் செய்கை என்பதாக அவர் அறிவுடைமையில் அறிவிக்கிறார். எப்படிச் சிந்திப்பது என்பதை முதலில் தெரிந்து கொள்ளல் வேண்டும். தனக்கு ஒருவன் கேடு சூழ்ந்திருக்கலாம். அக்கேடு அவனால் சூழக்கரணியம் என்ன? என்பதை முதலில் ஆய்ந்து கொள்வது முகாமையாகும். ஏனெனில்,

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்— குறள் 319.

மற்றவர்க்கு முற்பகலில் துன்பஞ் செய்தால் அதனால் வரும் துன்பம் பிற்பகலில் தானாகவே நமக்கு வந்து வருத்தும். எனவே தனக்குப் பிறரால் வந்துற்ற துன்பம் தாம் முற்பகலில் அவனுக்குச் செய்த துன்பத்தின் விளைவா என்பதை ஆய்ந்து, அதன் பின்னரே அஞ்சுவதா அன்றி அஞ்ச வேண்டாவா என்ற முடிவிற்கு வருதல் வேண்டும். நாம் எவருக்கும் துன்பம் விளைவிக்காத போழ்து தனக்கு ஒருவன் பொறாமையின் கரணியமாகத் துன்பஞ் செய்வானேயானால், அவனை வளர விடாது, அஞ்சாமல் அவனை ஒறுத்து விடல் தீதாகாது. ஏனென்றால் எவ்வகைத் துன்ப நிகழ்வும் கரணியம் இன்றி ஒருவன் துயரச் செயல்களைச் செய்து கொண்டே இருப்பானேயானால், பொறுமையைக்கூட அவன் கோழைக் குணமென எண்ணித் துன்பம் செய்தலைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பான். எனவே இந்தச் சூழலுக்கு அஞ்சாமை வேண்டும்; அஞ்சுவதற்கே அஞ்ச வேண்டும். அஞ்சக் கூடாததற்கு அஞ்சக் கூடாது; ஏனென்றால் அச்சமின்மையே மாந்தர்களுடைய வாழ்க்கைக்குத் துணையாகும் போர்க் கருவிகள் கூட துணையாக நிற்காது. அச்சமின்றிச் செயல் படுவதே நல்

துணையாகும். அந்நிலையில் இருந்தால்தான் போர்க்கருவிகளும் துணைநிற்கும். உள்ளத்தில் அச்சமில்லாத் துணிவு இருப்பவனிடம் போர்க்கருவி இருந்தால்தான் பயன்பெறும். அஃதின்றி அஞ்சும் கோழையிடம் அக்கருவி இருந்து எப்பயனையும் விளைவிக்காது. ஒருவன் சிந்தித்துத் துன்பம் நீக்கும் போது அஞ்சாமையே துணைநிற்கும்.

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்— குறள் 497.

ஒரு செயலைச் செய்யும் போது அவ்விடந்தேர்ந்து அஞ்சாமல் துணிந்து செய்வதே துணையாகும் என்றார் பேராசான். அஞ்சாமல் நின்று செய்ய வேண்டிய இடம் சரியெனப்பட்டால் உறுதி யான துணிவோடு செயல் படுதல் இன்றியமையாமையாகும்.

தீங்கான செயல் புரிவதற்கே அச்சம் வேண்டும் என்பது புலப்படும். தீங்குகளாவன பொறாமை, பிறன்பொருள்கவர்தல், பொய்ச்சான்று பகர்தல், தன்நலவளர்ச்சிக்காகக் கரவாக செயல் படல், பெரியோரைப் பழித்தல், புறங்கூறிக் கெடுத்தல் போன்ற தீச்செயல்களைச் செய்ய அஞ்சல் வேண்டும். இங்கு கூர்மதியின்றி அஞ்சாமல் பிறருக்கு இன்னாசெய்தல் பெருந் துன்பத்தையே தரும்.

மாந்தர்களின் வாழ்க்கையில் நல்லன, பொல்லாதன செயல்கள் நிகழும். அவற்றில் நல்லன தேர்ந்து அச்சமின்றி துணிதலும் பொல்லாதன வற்றைத் தேர்ந்து அஞ்சி வாழ்வதே வாழ்வாகும். பொல்லாதன நீக்கவும் அச்சமின்மை வேண்டும்.

இன்னொரு வகை கோழைமையாகும். இக்கோழைக்குணங் கொண்டவன், அஞ்ச வேண்டாதற்கும் அஞ்சுவான். இவன் தன் வாழ்க்கையைக் கூடச் செம்மையாக நடத்த முடியாது. இவனுடைய கற்பனை கூட அச்சத்தின் அடிப்படையிலேயே ஊறும். அச்ச உள்ளத்தோடு, இவன் காணும் பொருள்கள் யாவுமே அவனை அச்சுறுத்தும். எனவே குமுகாயத்தோடு ஒன்றும் பழக்கம் இவனிடம் குறைவாகவே தென்படும். அச்சத்தால் தனித்து வாழவே விரும்புவான். இவன் நல்லவற்றைச் செல்யக்கூட அஞ்சுவான். இவனுக்கு அஞ்சும் பழக்கம் இருப்பதால், இவன் பொய்க் கூற்றிலேயே வாழ விரும்புவான் இவனுக்கு வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை நீக்கி வாழ இயலாது. துணிவின்றித் துன்பப் படுவான். இவனுக்குப் பாதுகாவலுக்காக எக்கருவிகளைக் கொடுத்தாலும் அவை பயன்படா. இவன் செல்வத்தைப் பெருக்கவும் அஞ்சுவான். அவ்வகையில் பெருக்கினாலும் அதனைப் பயன்படுத்தவும் அஞ்சுவான். அதனாலேயே வள்ளுவம் இப்படிக் கூறுகிறது:

அச்சமுடை யார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு— குறள் 534

இவனைக் காத்துக் கொள்ள மலைநாடு போன்ற அரணுக்குள் வைத்தாலும் அதற்குள் இருக்கவே அஞ்சுவான். அதுபோன்று செல்வம் இருந்தாலும் அதன் பயனை நுகரவும் அஞ்சி வீணாகப் போக விட்டு விடுவான். அடிமையாக வாழ்ந்து கழிக்கவே விரும்புவான். இவனுக்கு உரிமை என்ற சொல்லுக்கே பொருள் தெரியாது. எதிலும் ஐயம் உள் நின்று நின்று நடுங்க வைக்கும். எனவே துணிவு இருக்காது. இதனை விளக்குகிறது புறநானூற்றுப் பாடல் ஒன்று.

செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறாஅர் கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே— புறம்: 214

நம்மாலும் நல்வினை செய்ய இயலுமோ என்ற ஐயத்திலேயே வாழ்வார்கள். உள்ள எண்ணங்கள் அழுக்குச் செறிந்து இருப்பதால உள்ளத்தில் துணிவான உணர்வுகள் இருக்கா. எனவே அச்ச உணர்வுகள் இருப்பின் இவர்களைக் கோழைகள் என்றே சொல்ல வேண்டும். இக்கோழைகளால் வீடும் பயனடையாது; இவர்களால் நாட்டிற்கும் பயனில்லை. எனவே இவர்கள் இருப்பதை விட இறப்பதே நல்லது. நம்மை ஆளும் தலைமைகளிடம் குறைகள் காணின் சுட்டிக்காட்ட அஞ்சாமை கட்டாயம் வேண்டும். ஆகவே மாந்தர்கள் செப்பமாக வாழ அஞ்சுவதற்கஞ்சி அஞ்சாமைக்கு அச்சப்படாமல் துணிவோடு வாழவேண்டும். ○

(அட்டை 3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறை ஆராய்ச்சியறிஞர்கள் கூறுகின்றனர். எடுத்துக் காட்டாக கி.பி. 630-இல் இந்தியாவுக்கு வந்த சீனப்பயணியின் காலத்தில் இருந்த அரிசிச் சோற்றைப் பற்றிய நிலை அவனுடைய பயணக் குறிப்பிலிருந்து அறியப் படுகிறது. அவனுக்கு நாளந்தாவில் படைக்கப் பெற்ற அரிசிச் சோறு, கரியதாகவும் அவரைப் பருப்பு அளவில் இருந்ததாகவும் யுவான்சுவாங் குறிப்பிட்டுள்ளான்.

○ ஆப்பிரிக்க நாடுகளில் ஆண்களும் பெண்களும் மணமுடித்துச் சில மாதங்களுக்குப்பின், அல்லது ஓர் இரண்டு ஆண்டுகளுக்குப்பின், இருவர் மிக எளிதாகப் பிரிந்து விடுகின்றனர். பின்னர், வேறு வேறு ஆடவர், பெண்டிர்களை அவர்கள் மண முடித்துக் கொள்கின்றனர். இனி, அங்குதான் ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் திருமணம் செய்வது மிகுதியாக உள்ளது.

○ எடை போட்டுப் பார்க்காமல் வாயில் வந்தபடி பேசுவோர் பேச்சுக்கு மதிப்பளிக்க வேண்டியதில்லை — காந்தியடிகள்

○ இந்தியா ஆண்டவன் என்னும் வெறிமயக்க (போதைப்) பொருளால் வெறிமயக்கம் கொண்ட ஒரு நாடு.
சீன மெய்ப்பொருளறிஞர் — இலின்யுடாங்

முத்து மொழிகள்

- அறத்திலேயே சிறந்தது, பிறரை மகிழ்விப்பதுதான்.
- உன்னை முறைப் படுத்திக் கொள்வதிலேயே நீ உனக்குக் கிடைத்த காலத்தைச் செலவிடுவதானால், பிறரைக் குற்றம் காண்பதற்கு உனக்கு நேரமிருக்காது.
- அன்றாட வாழ்க்கையின் சுவை நலன்களை நீ எண்ணிப் பார்த்தால், பழைய துன்பங்களை மறந்து விடும் வலிமை உனக்குக் கிடைத்துவிடும்.
- சென்ற காலப் பிழைகளை நீ நினைத்துக் கொண்டிராதே! நிகழ்காலப் பிழைகள் நேரா்தபடி விழிப்பாய் இரு.
- முட்டாள் பிறர் தன்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறான். ஓர் அறிஞன் பிறரைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறான்.
- ஒரு மாந்தனின் வெற்றி, அவனின் புலனடக்கத்திலேயே உள்ளது.
- வாய்ப்புகளை இழந்து விட்டதற்காக நீ கண்ணீர் விடாதே! புதிய வாய்ப்புகளுக்காக விழிப்பாக இரு.
- அச்சத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு அறிவைப் பெறுவதே சிறந்த வழி,
- நீ செல்வத்தை இழப்பாயானால் உனக்கு ஒன்றும் இழப்பில்லை; உடல் நலத்தை இழப்பாயானால், சில பயன்களை நீ இழந்து விடுவாய்; ஆனால் உன் ஒழுக்கத்தை இழந்து விட்டால், அனைத்தையும் நீ இழந்து விடுகிறாய்.
- புற இரைச்சல்கள் இல்லாமல் இருப்பது அமைதியன்று; உன் மன இரைச்சல்கள் இல்லாத ஒரு சூழ்நிலையையே அமைதி என்று சொல்லலாம்.
- அமைதி என்பதைப் பெறுவது மிகக் கடினம், ஏனெனில் அது உன் மூக்குக்குக் கீழே இருக்கிறது.
- ஒருவனிடம் நீ அன்பாக நடந்து கொள்ளாமல் நீ அவனின் மூடத்தனத்தை நீக்க முடியாது.
- நீ பிறரிடமிருந்து மதிப்பைப் பெற விரும்பினால், அவர்களை நீ நன்கு மதிக்கக் கற்றுக் கொள்.
- நீ பிறரிடம் அன்பாகவும் இனிமையாகவும் பேசுவதற்கு ஒரு காசையும் நீ செலவிட வேண்டியதில்லை.
- இன்னொருவர் மனத்தைத் துன்புறுத்துவது எப்பொழுதும் அன்பு ஆகாது,
- ஒருவர் சண்டையிடவில்லையானால், எப்பொழுதும் இருவருக்குள் சண்டையே நேராது.
- பகைவர்களை ஒழிப்பதற்கு ஒரே வழி, அவர்களிடம் நீ நட்பாக இருப்பதுதான்.

- அன்பு என்பது உடல் தொடர்புடையதன்று.
- பொறுமை என்பது அறிவில் தோன்றினால், அன்புடையவர்-களும் கூடப் பகைவர்களாகத் தென்படுவார்கள்.
- புகழுக்கும் போற்றுதலுக்கும் நாம் அடிமைப்பட்டால், இகழ்ச்சியும், இழிவுரையும் நம்மைச் சிதைத்து விடும்.
- உன் முன் வரும் எந்தத் தடைக்கல்லும் உன்னைத் தடுத்து நிறுத்தி விடும் என்று கருதாதே! அதை உன் முன்னேற்றத் திற்குக் கால் வைத்துச் செல்லும் படிக்கட்டாகக் கருதிக் கொள்.
- நம்மேல் அன்புடையவர்களின் கட்டளைகள், நம்மைச் சிறிய வர்களாக்குவதற்காக இடப்பெறுபவை அல்ல; நம்மைப் பெரியவர்களாக்குவதற்கே பயன் படுபவை.
- அச்சம் என்பது, நம்மையும் நம்மைச் சேர்ந்தவர்களையும் துன்பத்தில் ஆழ்த்திவிடும்.
- நேர்மையுள்ளவன் யாருக்குமே அஞ்ச மாட்டான்.
- ஒரு துளி துணிவு, ஒரு கல்லெடையுள்ள துன்பத்தைப் போக்-குகிறது.
- தன்னை நன்றாக உணர்ந்து கொண்டவனாலேயே தனித்து நின்று செயலாற்ற முடியும்.
- இவ்வுலகில் பெரிய கேள்வி என்பது இறப்பே! அதற்குச் சரி யான விடை வாழ்க்கையே!
- மெலிவான. சோம்பலான மனம் வலிவான எண்ணங்களை — சிந்தனைகளை - வெளியிடுவதில்லை.
- எப்பொழுதும் நம்பிக்கையைக் கைவிடாதே! ஏனெனில் நம்பிக்கை என்பது உன் வாழ்க்கையை உன்னுடன் கட்டி வைத்திருக்கும் கயிறு.
- நிறைய பேர் மிகுதியாக எண்ணுகிறார்கள்; மிகுதியாகப் பேசு-கிறார்கள்; ஆனால் செயலில் பின் தங்கி விடுகிறார்கள்.
- காத்திருப்பவர்களுக்கு துணைகள் வந்து சேர்கின்றன.
- ஒருமணி நேரத்தை நீ பயனுடைய வழியில் செலவழித்தால், ஆயிரம் மடங்கு ஊதியம் உனக்குக் கிடைக்கிறது. ஆனால்; ஒரு மணி நேரத்தை நீ வீணான வழியில் செலவழித்தால், ஆயிரம் மடங்கு இழப்பு வந்து சேர்கிறது.
- ஓர் எலி சிறிய உணவுப் பொருளையே ஒரு களஞ்சியமாக மதிப்பிட்டுக் கொள்கிறது.
- உன் வாய் தீய மொழிகளைப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, உன் மனம் எவ்வாறு நல்லனவற்றைச் சிந்திக்க முடியும்?
- நீ எவ்வளவு சிறந்த சொற்களைப் பயன்படுத்துகிறாய் என்-பதைப் பிறர் கவனிப்பதில்லை; ஆனால் நீ என்ன சிறந்த செயலைச் செய்கிறாய் என்பதையே பிறர் கவனிக்கிறார்கள்.

பொத்தகங்கள் சாவுப் படுக்கையில்!

தொலைக்காட்சியின் தாக்கத்தினால் பொத்தகங்கள் இறந்து விடுமோ என்று பலரும் அஞ்சுகிறார்கள்.

இளம் தலைமுறையினருக்கிடையில் பொத்தகம் படிக்கும் ஆர்வம் வேகமாகக் குறைந்து வருகிறது என்பது உண்மையே! பதிப்பாளர்களும் மொத்த விற்பனையாளர்களும் இப்படி ஒரு நிலைமை தோன்றலாம் என்று ஏற்கனவே எச்சரித்து வந்துள்ளனர். அந்த எச்சரிக்கை உண்மையாகி வருகிறது என்பதற்குப் பம்பாய் நகரம் ஒரு சான்று.

கடந்த 112 ஆண்டுகளாக, பம்பாய் நகரில் இயங்கி வந்த தாக்கர் குழுமம் எனும் புகழ்பெற்ற பொத்தக வெளியீட்டு நிறுவனம் கடந்த 1-10-90 முதல் இழுத்து மூடப்பட்டு விட்டது; காரணம் தாங்க முடியாத இழப்பு.

தாக்கர் நிறுவனம் மூடப்பட்டதைத் தொடர்ந்து பம்பாய் நகரில் இயங்கும் புகழ் பெற்ற பொத்தக நிறுவனங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். 'இண்டர் நேஷனல் புக்ஹவுஸ்" 'ஸ்ட்ராண்ட்.' 'புக்பாயிண்ட்' ஆகியவைதாம் இப்போது நகரிலுள்ள முகாமையான பொத்தக நிறுவனங்கள். (ஐந்து விண்மீன் விடுதிகளில் இயங்கும் பொத்தக விற்பனைக் கூடங்களை இதில் சேர்க்கவில்லை)

தாக்கர் நிறுவனத்திற்குத் தற்கால் இயக்குநர்களாய் இருக்கும் ஆர்.கே. இலக்குமன், ரஃபீக் ஸகரியா —கியோருக்கு சில நாட்களுக்கு முன்பு நிறுவன உரிமையாளரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இயக்குநர் பதவியில் இருந்து பணவிடுப்புச் செய்யும்படியும், இனியும் இந்தப் பொத்தக நிறுவனத்தை இழப்பீட்டில் நடத்த இயலாது என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்ததாம்!

பம்பாயின் மற்றொரு புகழ்பெற்ற நிறுவனமான "ஜெய்கோ" பொத்தக விற்பனை நிலையம் 1983-இல் மூடப்பட்டுவிட்டது; பொத்தக விற்பனை கணிசமாகக் குறைந்துவிட்டதுதான் காரணம்! 'ஜெய்கோ' வெளியீட்டு ஆசிரியரும் பொத்தக விற்பனைப் பிரிவின் முன்னாள் மேலாளருமான சர்மா கூறுகிறார்:

"மக்களின் கவனமெல்லாம் தொலைக்காட்சி ஒளியிழை பக்கம் திரும்பியிருக்கிறது. அவர்களுக்கு இப்பொழுது பொத்தகங்கள் வேண்டாம் என்றாகி விட்டது!"

பொத்தகங்களின் விலையேற்றமும் விற்பனைக் குறைவுக்குக் காரணம் என்று பதிப்பகத்தார் கூறுகின்றனர்.

சாவுப் படுக்கையில் கிடக்கும் பொத்தகங்கள் மறுவாழ்வு பெறுமா?

அரசும் பொத்தக விரும்பிகளுந்தாம் விடை சொல்ல வேண்டும்.

நன்றி— 'சமரசம்'

○

விண்வெளி வீரர்களின் மனவுணர்வுகள்!

விண்வெளியில் பறந்து உலகினை வலம் வந்த முதல் மாந்தர் எனும் மிகப்பெரிய அருஞ்செயல் புரிந்தவர் சோவியத் நாட்டைச் சேர்ந்த யூரி ககாரின்-1961 ஏப்ரல் 12-ஆம் நாள் அவர் அந்த அருஞ் செயலை நிகழ்த்தினர். அந்த அருஞ்செயல் நிகழ்ந்து இந்த ஏப்ரல் 12-ஆம் நாளுடன் முப்பது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இந்த முப்பதாண்டுக் காலத்தில் வின்வெளித் தொழில் நுட்பம் மிகப் பெரும் அளவில் வளர்ந்து முன்னேறியிருக்கிறது. இன்று விண்வெளித் துறையில் பல்லாயிரக் கணக்கானோர் பணியாற்றி வருகிறார்கள். விண்வெளி வீரர்களை உளவியல் முறையில் அணியப்படுத்துவதற்கு மிகுந்த கவனத்துடன் வகுக்கப்பட்ட திட்டம் ஒன்று வேண்டியிருக்கும் என 1961-இல் பலர் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் இன்று அ'து ஓர் ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாடாக மாறியிருக்கிறது.

விண்வெளி வீரர்களை உளவியல் முறையில் அணியப்படுத்தும் வகையில் முனைவர் ஓல்கா கொசரெங்கோ தலைசிறந்த திறலாளராக விளங்குகிறார். தற்போது இவர் சோவியத்து மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த மருத்துவ-உயிரியல் ஆராய்ச்சிக் கழகத்தில் ஆய்வுக்கூடப் பொறுப்பாளராக இருந்து வருகிறார். விண்வெளியில் மாந்தனின் உளச் சமநிலையைப் பாதுகாப்பதற்குத் தேவையான கருத்தை உருவாக்குவதில் ஓல்கா ஈடுபட்டு வருகிறார். இதுபற்றி அவர் கூறுவதை இங்கு தருகிறோம்,

உளவியல் முறையில் அணியப் படுத்துவதற்கான திட்டம்: ''விண்வெளி வீரர்களை உளவியல் முறையில் அணியப்படுத்தும் சிக்கலை 1976-இல் தான் நாங்கள் முதன் முதலில் எதிர்கொண்டோம். விண்வெளியில் சல்யூத்-6 ஆய்வு நிலையத்தில் விண்வெளி வீரர்களை நீண்டகாலம் தங்க வைப்பதற்கான அணியப்படுத்தும் பணிகள் அப்போதுதான் முழு வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. விண்வெளி வீரர்களை அந்த சல்யூத் நிலையத்தில் 100-நாள்கள் தங்க வைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அத்தனை நாள்கள் அங்கு தங்கும் போது அவர்களின் நடத்தை, மனநிலை, வேலைத் திறன் ஆகியவை ஊறுபடும் என்பது தெளிவாகப் புலப்பட்டது. அந்தப் பின்னணியில், நிலவுலகில் இருக்கும் போது மாந்தனிடம் இருக்கும் உளவியல் நோக்கு விண்வெளியில் அதிகமாக மாறிவிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எங்களுக்கு ஏற்பட்டது. அந்த விண்வெளிச் செலவு தொடங்குவதற்கு 12 மாதங்களுக்கு முன்பாக 1976-இல், மருத்துவ உயிரியல் ஆராய்ச்சிக் கழகத் திறவோரிகள் அடங்கிய ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. அந்தச் சிறப்பு அறிஞர் குழுதான் விண்வெளி வீரர்களை உளவியல் முறையில் அணியப்படுத்துவதற்கான முழுமையான திட்டம் ஒன்றை வகுத்துத் தந்தது.''

விண்வெளி வீரர்கள் எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்-கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகின்றன? : "விண்வெளிச் செலவு செல்வதற்கு முன்பாக, பயிற்சி மேற்கொள்ளும் சமயத்-தில் விண்வெளி வீரர்கள் அவர்களின் மருத்துவர்களுடன் நெருக்-கமாக ஒத்துழைப்பதற்கு இந்தத் திட்டத்தில் முதலிடம் தரப்-படுகிறது. முதலில் அறிஞர் குழுவினர் விண்வெளி வீரர்கள் எது எதனில் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதை விரிவாக ஆராய்-கிறுர்கள். அவர்களுடைய அன்ருட ஈடுபாடுகளைக் கண்டறிவ-தற்காக என்றே சிறப்புக் கேள்வித்தாள்கள் உருவாக்கப்பட்டுள்-ளன. அந்தக் கேள்வித்தாள்களை விண்வெளி வீரர்கள் நிறைவு செய்து தர வேண்டும். கேள்விகளுக்கு அவர்கள் தந்துள்ள விடைகளின் அடிப்படையில், விண்வெளி வீரர்கள் எடுத்துச் செல்வதற்கான பொத்தகங்கள், செய்தித்தாள்கள். தாளிகைகள், ஒளியிழைகள் முதலியவற்றை அறிஞர் குழு தேர்ந்தெடுக்கிறது."

விண்வெளியில் ஒளியிழைப் (வீடியோ) படம் பார்க்க வசதி: "தொடக்கக் காலத்தில் இன்றிருப்பது போன்ற பலதரப்பட்ட பொழுது போக்கு வசதிகள் விண்வெளி வீரர்களுக்கு இல்லை. புகழ்பெற்ற பாடகர்கள் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், விண்வெளி வீரர்களுடைய குடும்பத்-தினரின் அன்ருட வாழ்க்கையை விளக்கும் காட்சிகள் அடங்கிய ஒளியிழைப் பேழைகளை (வீடியோ காசட்டுகளை) இன்று விண் வெளி வீரர்கள் தங்களுடன் விண்வெளிக்கு எடுத்துச் செல்ல முடியும். சோவியத்துத் திரைப்படங்களையும் அயல் நாட்டுத் திரைப்படங்களையும் கண்டு களிப்பதற்கும் கூட அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது."

விண்வெளியிலிருந்தவாறே செய்தி ஒலிபரப்புகளைக் கேட்கும் வசதி : "விண்வெளி வீரர்களின் மனச் சமநிலையைப் பாதுகாப்பதற்காக வானொலி, தொலைக்காட்சி வழிப்பட்ட செய்தித் தொடர்புகள் விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றன. சோவியத்து அயல் நாட்டுச் செய்தி ஒலிபரப்புகள் தொடர்ந்து விண்வெளிக்கு அஞ்சல் செய்யப்படுகின்றன. விண்வெளி வீரர்-களுடன் நேரடியாகத் தொலைத் தொடர்பு மூலம் உரையாடல் நடத்துவதற்கான நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காகப் புகழ்பெற்ற பல்துறை சோவியத்துப் பெருமகர்கள் தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு முறையாக வருகை தருகிறுர்கள். இதன் மூலம் இவர்களில் பலர் விண்வெளி வீரர்களுடன் நேரடித் தொடர்பு-களைப் பேணி வருகிறுர்கள்."

விண்ணிலிருந்தபடியே குடும்பத்தாருடன் உரையாடலாம்: "விண்வெளியில் உள்ள வீரர்களுடன் உரையாடுவதற்காகக் குடும்பத்தினரும் சுற்றத்தாரும் கூட தரைக் கட்டுப்பாட்டு நிலை-யத்துக்கு வருகிறுர்கள், கடந்த சில ஆண்டுகளாக விண்வெளி யில் "மிர்" ஆய்வுக் கூடத்தில் தங்கியிருந்து ஆய்வு செய்து வரும் விண்வெளி வீரர்கள் அவர்களுடைய வீட்டுக்கே தொடர்பு

கொண்டு குடும்பத்தினருடன் பேசும் வாய்ப்பினைப் பெற்று வருகிறார்கள். 'மிர்' ஆய்வு நிலையத்துடன் செய்தித் தொடர்பு கொள்வதற்கு ஓர் அஞ்சல் செயற்கைக் கோள் உதவி வருகிறது. இது மட்டுமின்றி, மிர் ஆய்வுக் கூடத்திலிருக்கும் மூசா மானரோவ் தம்மிடமுள்ள ஹாம் வானொலி மூலமாகவும் உலகில் உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு வருகிறார்.''

''விண்வெளியில் தங்கிப் பணியாற்றுவதற்கு ஏற்றவாறு விண்வெளி வீரர்களை உளவியல் முறையில் அணியப் படுத்துவதற்கான ஆய்வர் குழு, கடந்த 15 ஆண்டுகளில் நல்ல பட்டறிவைப் பெற்றிருக்கிறது. விண்வெளியில் மாந்தனின் உளச் சம நிலையைப் பாதுகாப்பது எப்படி என்பதையும், சிறந்த முறையில் செயலாற்றுவதற்கு விண்வெளி வீரர்களுக்கு உதவி செய்வது எப்படி என்பதையும் அது கற்றுத் தேர்ந்திருக்கிறது. எனினும், அறிஞர் குழு புதிய புதிய கடமைகளை எதிர்கொண்டு வருகிறது. செவ்வாய்க் கோளுக்குச் செல்வது உள்ளிட்ட நெடுந்தொலைவு விண்வெளிச் செலவுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு இப்போது நேரம் வந்திருக்கிறது. செவ்வாய்க் கோளுக்குச் சென்றடைவதற்கு இரண்டு ஆண்டுகள் விண்வெளியில் பறக்கும் விண்வெளி வீரர்களை இயன்ற அளவுக்கு நிலவுலக வாழ்க்கையுடன் நெருங்கியிருக்குமாறு செய்வது எவ்வாறு என்பதுதான் இப்போது அறிஞர் குழு முன்பு உள்ள சிக்கல். எனினும், இதுபோன்ற சிக்கல்களை எல்லாம் வெற்றியுடன் செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கை அறிஞர் குழுவுக்கு இருக்கிறது.'' இவ்வாறு சோவியத்து அறிஞர் ஒல்கா கூறினார்.

○

சுவை உணர்வு!

பொருள்களின் மூலக்கூறை (Molecules) அறிவதற்குச் சுவையுணர்வு பயன்படுகிறது. பொருளானது கரைந்து மூலக்கூறின் அணுக்கள் அசைந்தால்தான் சுவைக்க முடியும். அணுக்களின் அசைவு அதிகமாக இருந்தால் சுவை நன்றாகத் தெரியும். இதனால்தான் சூடான குளம்பி (காஃபி) அதிகச் சுவையுடையதாகத் தோன்றும். நமது நாக்கில் 3000 சுவை அணுக்கள் உள்ளன.

திமிங்கலத்திற்கு மிகவும் குறைந்த அளவுதான் சுவை அணுக்கள். பெரும்பாலும் அது எதையும் விழுங்கி விடுவதனால் அதற்குச் சுவை தெரிந்தும் பயனேதுமில்லை. ஆனால், வேறு உயிரினங்களுக்குச் சுவை அணுக்கள் அதிகமாக உள்ளன. மாந்தனை விட அதிகம் சுவை கண்டு உண்ணும் ஆற்றல் பன்றிக்கு உண்டு. அதற்கு 5,500 சுவை அணுக்கள் உள்ளன. பசுவிற்கு 35,000 சுவை அணுக்கள். ஆனால், மானுக்கு 50,000 சுவை அணுக்கள்.

—பேரா. ம. பெ.

'நன்றி' 'சர்வோதயம்' பிப்: 91.

பெறுகின்றன. அதில் தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 1400 கொலைகள் நடக்கின்றன.

- இந்தியத் தொடர்வண்டித் துறையில் நிகழும் ஊழல்கள் காரணமாக மட்டும் அரசுக்கு ஓர் ஆண்டுக்கு 2000 கோடி உருபா இழப்பாகிறது என்று நடுவணரசு தொடர்வண்டித் துறைத் துணை அமைச்சர் அசய்சிங் பாராளுமன்றத்தில் கூறினர்.

- சீட்டுக்கட்டு விளையாட்டு கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது. அக்கால் அட்டைகளில் ஓவியங்கள் வரையப்பட்டுச் சீட்டு விளையாடப் பெற்றது. இந்தியாவில் இதே அட்டையில் ஓவியங்கள் வரையப்பெற்று விளையாடுவதை கி.பி. 1527-இல் அக்பர் அறிமுகப் படுத்தினர்.

- கதிரவன் நம் உலகத்தைப் போல் 10 இலக்கம் மடங்கு பெரியது. அதன் வெளிப்பரப்பின் சூடு 6000 பாகை செண்டிகிரேடு என்றும் அதன் உள்புற வெப்பநிலை ஏறத்தாழ இரண்டு கோடி பாகை என்றும் கணக்கிடப் பெற்றுள்ளன. கதிரவனின் ஒளி நொடிக்கு 1,86,000 கற்கள் செல்கின்றது.

- கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை என்று ஒன்றை அரசு அமைத்து, அதில் அவர் பெயரால் மண்டபம் ஒன்றும், அவர் சிலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாறை மீது அமர்ந்துதான் (1892-ஆம் ஆண்டு அமர்ந்து, அவர் ஊழ்கம் (தியானம்) செய்த போதுதான்) அவர் இவ்வுலகில் செய்ய வேண்டிய பணிகள் குறித்துத் திட்டமிட்டார் என்று சொல்லப் பெறுகிறது.

- தமிழகத்தில் ஏறத்தாழ 2000 திரைப்படக் கொட்டைகைகள் இருக்கின்றன.

- சாத்துக்குடி என்னும் ஆரஞ்சுப் பழம் உடல் நலத்துக்கு வேண்டிய பல ஊட்டச் சாரங்கள் நிரம்பிய பழமாகும் அதில், புரதம் (புரோட்டீன்,) கொழுப்பு, மூல உப்புகள், மாவுப் பொருள்கள், சுண்ணும்பு, கந்தகம். இரும்புச் சாரங்கள், உயிர்சாரம் (வைட்டமின்) ஏ,பி,சி முதலியவை நிறைய அடங்கியுள்ளன.

- தொடக்கக் கால தி.மு.க. ஆட்சியில், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி நீர்த் திட்டத்திற்கு வாங்கப் பெற்ற கற்காரைக் குழாய்கள் ஏறத்தாழ 10,000 அளவில் இன்றும் வீணகச் சாலையோரங்களில் கிடக்கின்றன.

- நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் கோதுமையும் பார்லியும்தாம் முதன் முதலில் உண்ணத் தொடங்கிய பொருள். அவற்றின் காலம் கி.மு. 8000 முதல் கி.மு. 5000 வரை என்றும் அவை முதன் முதல் நடுத்தரைக்கடல் பகுதியில் உருப்பெற்றிருக்கலாம் என்றும் சொல்லப்பெறுகின்றது. அரிசி விளைவு முதன் முதலில் சீனாவில்தான் தோன்றியது அதன் தொடக்கக் காலம் கி.மு. 2,800.

- மாந்தர்களின் தோற்றம், பண்பு, நிறம், அளவு முதலியவை எவ்வாறு படிநிலை வளர்ச்சி (பரிமாண வளர்ச்சி) பெற்று இன்றுள்ள திருந்திய நிலைக்கு வந்தனவோ அவ்வாறே நாம் உண்ணும் உணவுப் பொருள்களும் பலபடி கூர்தல் வளர்ச்சி பெற்றுத்தான் இன்றுள்ள நிலைக்கு வந்தனவாக. வேளாண்-

(தொடர்ச்சி உள்ளே 11-ஆம் பக்கம்)

ஐரோப்பாவில் தமிழின் பெருமை!

250 ஆண்டுகளுக்கு முன்னால் தஞ்சை மாவட்டத்திலே தரங்கம் பாடிப் பகுதியிலே வந்து தங்கியிருந்தார், ஒரு செருமன் நாட்டுச் சமயத் தந்தையார் அல்லது போர்த்துக்கீசியச் சமயத்தந்தையார்; அவருடைய பெயர் 'சீகன்பாக்' என்பது; அவர் ஆசிய நாடுகளிலே சுற்றுச் செலவு நடத்தினார்; தமிழ் நாட்டிலும் ஏறத்தாழ முப்பது நாற்பது ஆண்டுக் காலம் அவர் வாழ்ந்து தமிழைப் படித்தார்; தமிழ்ப் புலவர்களிடத்திலே பழகினார்; தமிழ் எழுத்துகளிலிருந்து, தமிழ் இலக்கியம் வரையில் அவர் கற்றுத் தேர்ந்தார். அதற்குப் பின்னர் அவர் தம்முடைய நாட்டிற்குச் செல்கிறபோது இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றார்; அங்கு அவருக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு முதலாவது சியார்சு மன்னர் காலத்தில் ஒரு வரவேற்பு அளித்தார்கள். அவருக்கு வழங்கப்பெற்ற அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் அந்த நகரத்தினுடைய மிகப் பெரிய சமயத்தந்தையார் 'ஆர்ச் பிசப் ஆப் காண்டர்பரி' அவர்கள் அவரை வரவேற்றார்;

அப்படி வரவேற்கிறபோது, 'சீகன் பாக்' கிழக்கு ஆசிய நாடுகளிலும் இந்தியாவிலும் தங்கியிருந்து சமயப் பணியாற்றியதற்காகப் போற்றிப் புகழ்ந்து, 'அவ்வளவு பெரிய அரும்பணி ஆற்றிய பெரியவரை நான் வரவேற்பதற்கு ஏற்ற மொழி என்று கருதுகிற உயர்ந்த மொழி இலத்தீன் மொழி; அந்த இலத்தீன் மொழியிலே நான் சீகன்பாக் அவர்களைப் பாராட்டி இந்த வாழ்த்திதழைப் படிக்கிறேன்' என்று, 'ஆர்ச் பிசப் ஆப் காண்டர்பரி'' முதலாம் சியார்சு மன்னர் முன்னிலையில் அவர் படித்து வழங்கினார். அந்த இலத்தீன் மொழியிலே வழங்கப் பெற்ற அந்த வரவேற்பைப் பெற்றுக் கொண்ட சீகன்பாக் நன்றி கூற எழுந்து, இவ்வாறு கூறினார்:

''என்னை ஓர் உயர்ந்த, மொழியிலே வரவேற்றால்தான் எனக்குப் பெருமை என்று 'ஆர்ச் பிசப் ஆப் காண்டர்பரி' அவர்கள் இலத்தீன் மொழியிலே வரவேற்புரை வழங்கினார்கள்; என்னிடத்தில் கொண்ட பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் நான் என்றும் தகுதி உடையவன் என்று, ஓர் உயர்ந்த மொழியிலே என்னை வரவேற்பது எனக்குத் தருகின்ற பெருமை என்று கருதி காண்டர்பரி தந்தையார் இப்படி வழங்கியிருக்கிற போது, எனக்கு இவ்வளவு பெரிய வரவேற்புத் தந்த உங்களுக்கு, நானும் ஓர் உயர்ந்த மொழியிலேதான் விடையளிக்க வேண்டும். எனவே, என்னுடைய நன்றியறிதலை ஓர் உயர்ந்த மொழியிலே சொல்வதை நான் உங்களுக்குச் செய்கிற பெருமையாகக் கருதுகிறேன்; எனக்கும் அது பெருமையாக இருக்கும் என்றும் கருதுகிறேன்.'' என்று கூறிவிட்டு, ''உலகம் தோன்றிய நாள்முதல் உலகத்திலே தோன்றிய—இறைவன் படைத்த மொழி என்று சொல்லுகிற —இறைவனாலே படைக்கப் பெற்ற மொழிகளிலெல்லாம் மிக உயர்ந்த மொழி என்று நான் அறிந்து வந்திருக்கின்ற தமிழ் மொழியில் உங்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.'' என்று கூறித் தமிழ் மொழியின் பெருமையை எடுத்துக் கூறி, அந்த மொழியிலேயே நன்றி உரைத்தார் என்று ஒரு வரலாற்றுச் செய்தி இருக்கிறது.

—பேரா. அன்பழகன்,
நன்றி 'உதயக்கதிர்' (பிப்—'82)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005; (தமிழகம்)